**புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2021**

---

புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் நிதி மற்றும் நிர்வாக தலை நகரங்களிலுள்ள பாரிய போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் மற்றும் சேவை வழங்களினை அதிகரிப்பதற்காக கொழும்பு கோட்டையினை துறைமுக நகரம்இ கொழும்பு துறைமுகம்இ மாலபே கல்வி வலையம் மற்றும் பத்தரமுல்லை நிர்வாக மையம் உள்ளடங்களாக ஏற்கனவேயுள்ள அதிவேகப்பாதை வலையமைப்புடன் இணைப்பதனூடாக அதிவேகப்பாதை வலையமைப்பின் இணைப்பினை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோல்கலாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 193 பில்லியனானதுடன் பிரதான அடிச்சுவட்டின் அண்ணளவான நீளம் 16.4 கி.மீ ஆகும். முன்மொழியப்பட்ட செயற்திட்டமானது பொது தனியார் பங்குடமையாக (பிபிபி) வடிவமைத்தல்-நிர்மானித்தல்-பராமரித்தல் மற்றும் மாற்றுதல் (டீபீஎப்ஓஎம்டி) எனும் அடிப்படையில் அமுல்படுத்த வேண்டியதுடன் 2025 இல் 3 வருடங்களிற்குள் பூர்த்திசெய்ய பட்டியலிடப்பட்டிருந்தது மேலும் முதலீட்டளரினால் 15 வருடங்கள் பராமரிக்கப்படும்.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2 சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2006 பெறுகை வழிகாட்டி மற்றும் பொது நிதிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டி இல. 12 | செயற்திட்டத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுகை திட்டம் மற்றும் விபரமான பெறுகை திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் வழங்கப்பட்ட கருத்துரைகள் முழுமையாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்கால பெறுகை திட்டங்களிற்குள் இணைத்துக்கொள்ளப்படும். | உரிய வழிகாட்டிகள் மற்றும் சுற்றறிக்கைகளுடன் இணங்கி ஒழுக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை. | செயற்திட்டமானது செயற்திட்ட உத்தியோகத்தர்களின் உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரங்களை பதிவு செய்ய கைவிரல் பதிவு இயந்திரத்தை பயன்படுத்தாததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 2 மில்லியன் தொகையான மேலதிக நேர கொடுப்பனவு கைவிரல் அடையாளங்களை பயன்படுத்தி வரவினை உறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்டிருந்தது. | கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் இலங்கையில் கோவிட் 19 நோய்த் தொற்றுப்பரவல் நிலவியதன் காரணமாக பல்வேறு மாதங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

செயற்திட்ட நடவடிக்கைகளானது போட்டித்தன்மையான ஏலத்தின் கீழ் முதலீட்டாளரை தெரிவு செய்ய 2016 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் முதலீட்டாளரை தெரிவு செய்வதற்கான செயன்முறை 4 வருடங்கள் கடந்ததன் பின்னர் 2020 மே 06 இல் நடாத்தப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள் கூட்டத்தினால் ரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் வரையறுக்கப்பட்ட சீன துறைமுக பொறியியல் கம்பனியின் முதலீட்டு மும்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கான முதலீட்டு சபை மற்றும் இம்முதலீட்டிற்கான ஏனைய ஆர்வமுடைய தரப்பினர்களின் மும்மொழிவுகள் என்பவற்றிற்கு அனுமதி வழங்கியிருந்தது. இருப்பினும் 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு கூட சிவில் நிர்மான வேலைகளினை கையளிப்பதற்கு செயற்திட்டத்தினால் எவ்வித முதலீட்டாளர்களும் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் ஏற்படுத்தப்பட்ட மொத்த கிரயம் ரூபா 1,041 மில்லியனாக இருந்தது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய வரையான 10.4 கி.மீ வீதிப்பிரிவிற்கான சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கை சுற்றாடல் பாதகாப்பு பிரிவின் ஊடாக (ஈபீஏ) நெடுஞ்சாலை சுவடு செல்வதன் காரணமாக 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு கூட மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் (சீஈஏ) அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஐந்து சட்ட வழக்குகள் செயற்திட்டத்திற்கு எதிராக வெளித்தரப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் இவ்வழக்குகள் 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு கூட தீர்க்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | ஐந்து தரப்பினர்கள் ஈஐஏ வின் விடையத்திற்காக (சுற்றாடல் பாதுகாப்பு பிரிவு - ஈபீஏ) செயற்திட்டத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுத்துள்ளதுடன் இது செயற்திட்ட நடவடிக்கைகளின் மிருதுவான தொடர்ச்சிக்கு ஓர் பிரதான தடங்களாக இருக்கும். | சிவில் நிர்மான வேலைகள் மற்றும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை கையளிப்பதற்கு முன்னர் மொத்த வீதி நீளத்திற்குமான சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கை பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | வாடகைக்கு பெறப்பட்ட 17 வாகனங்களில் 4 வாகனங்கள் குத்தகை உடன்படிக்கை மைலேச் இன் பிரகாரம் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் ஓர் வாகனம் 2020 மே 11 இல் ஓர் விபத்துக்குள்ளாயிருந்ததுடன் 2021 ஏப்ரல் 22 இல் ரூபா 528இ000 கிரயத்தில் திருத்தம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும்இ அது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது இவ்வாகனத்திற்கு சில பிரதான திருத்தங்கள் (மின்கலம் மாற்றியமைப்புஇ வழக்கமான வாகன திருத்தம்) தேவைப்படுவதுடன் திருத்தியமைப்பு பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் ஆர்டிஏவிற்கு கையளிக்கப்படும். | செயற்திட்ட சொத்துக்களினை வினைத்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 செயற்திட்ட நோக்கத்திற்கு அப்பாற்பட்டு செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் வேலைப்பரப்பிற்கு முரணாக கூட்டு மொத்தம் ரூபா 550இ163 புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான உயர்த்திய நெடுஞ்சாலை இன் திறப்பு விழாவின் நேரடி ஒளிபரப்பிற்காக இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்கு 2021 ஜூலை 27 இவ் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | திறப்பு விழா மற்றும் விழிப்புனர்வு நிகழ்ச்சித்திட்டம் என்பன பிரதான அக்கறையுடைய தரப்பினர்களின் பங்குபற்றுதலுடன் 2021 இல் நடாத்தப்பட்டிருந்தது. அதன்படி கொடுப்பனவு நேரடி ஒளிபரப்பிற்காக இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்கு செய்யப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் இணங்கி நடக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 காணி சுவீகரிப்பு மற்றும் மீள வழங்கள் மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| உயர்த்திய நெடுஞ்சாலை செயற்திட்டத்திற்காக 2,571 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. அதில்இ 1,110 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 1,250 காணித்துண்டுகள் புதிய களனிப்பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான பிரிவிற்காக கொள்வனவு செய்ய வேண்டியிருந்த அதே நேரம் ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய வரையான பிரிவிற்காக 1இ321 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய வேண்டியிருந்தது. இருப்பினும் பிரிவு 38 (அ) புதிய களனிப்பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான பிரிவிற்கான 1இ334 காணித்துண்டுகளிற்காக பிரசுரிக்கப்பட்டிருந்தும் ராஜகிரிய தொடக்கம் அத்துருகிரிய வரையான பிரிவிற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மாத்திரமே செய்யப்பட்டிருந்தது. மேலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பிரிவு 17 இன் கீழ் எவ்வித காணித்துண்டுகளிற்காகவும் எவ்வித இழப்பீடுகளும் மதிப்பிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | பிரிவு 38(அ) 1,334 காணித்துண்டுகளிற்காக பிரசுரிக்கப்பட்டிருந்தது. காணி சுவீகரிப்பு செயன்முறை ஈஜஏ விற்கெதிராக விண்ணப்ப இல 545/2021 ரூ 546/2021 மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கீழ் (நீதிப்பேராணை) 2022/02/21 இல் வழங்கப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உதவியின் பிரகாரம் 2022/02/22 இல் இருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. மிகுதி வேலைகள் நிலுவையிலுள்ள நீதிப்பேராணை (றுசவை) விண்ணப்பம் தீர்க்கப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்படும். | செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் சுற்றுச்சூழல் விளைவு மதிப்பீட்டு அறிக்கை பெறப்படல் வேண்டும். |